# Visit of External Affairs Minister to Bali, Indonesia for G20 Foreign Minister’s Meeting (FMM)

# July 05, 2022

---------------------------------------------------------------------

## ஜி20 வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் (FMM) பங்கேற்பதற்காக, இந்தோனேசியாவின் பாலிக்கு வெளியுறவு அமைச்சரின் விஜயம்

ஜூலை 05, 2022

ஜி 20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் (FMM) பங்கேற்பதற்காக 2022 ஆம் ஆண்டு ஜூலை 07-08 ஆம் தேதிகளில் இந்தோனேசியாவின் பாலிக்கு வெளியுறவு அமைச்சர் (EAM) டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் பயணம் மேற்கொள்கிறார். இந்தோனேசியா குடியரசின் வெளியுறவு அமைச்சகம் இந்தோனேசியா ஜி20 தலைமையின் கட்டுப்பாட்டுக்குள் இந்த கூட்டத்தை நடத்துகிறது. வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில், பங்கேற்கும் வெளியுறவு அமைச்சர்கள், நாடுகளுக்கிடையே உறவை வலுப்படுத்துதல் மற்றும் உலகம் முழுவதும் தற்போது சந்திக்கும் பிரச்சனைகளான உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு உட்பட தற்போது நிலவும் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பார்கள். இந்த பயணத்தின் போது, பிற ஜி 20 உறுப்பு நாடுகள் மற்றும் அழைப்பு விடுத்த நாடுகளிலிருந்து வரும் சக அமைச்சர்களுடன் பல்வேறு இருதரப்பு சந்திப்புகளை வெளியுறவு அமைச்சர் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. ஜி 20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் பங்கேற்பது ஜி 20 உறுப்பு நாடுகளுடனான இந்தியாவின் உறவை வலுப்படுத்தும். ஒரு ஜி20 முக்கூட்டு அமைப்பு உறுப்பினராகவும், வரவிருக்கும் ஜி20 இன் தலைமையாகவும், வரவிருக்கும் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் விவாதங்களில் இந்தியாவின் பங்கு இன்னும் கூடுதலான முக்கியத்துவத்தை பெறும் என நம்பப்படுகிறது. நாங்கள் தற்போது இந்தோனேசிய தலைமைக்கு உறுதியான ஆதரவை வழங்கி வருகிறோம், மேலும் நமது தலைமையின் போது மிகச் சிறந்த நன்மைகளை அடையும்பொருட்டு, தற்போது சந்திக்கும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்த விவாதங்களை முன்னெடுத்துச் செல்வோம்.

புதுடெல்லி
ஜூலை 05, 2022

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.